# தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
# இந்தியவானிலைத்துறை
## வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை
## திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (01.06.2022 முதல் 05.06.2022 )

**அறிக்கை எண் 043/2022** **தேதி.31.052022**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 40°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 29°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 18°செ முதல் 22°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 9°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் பரவலாக மழை பெறப்பட்டது.

**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (2605.2022 முதல் 30.05. 2022) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 05.06.2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 26/05 | 27/05 | 28/05 | 29/05 | 30/05 | தேதி | நாள் -1 01/06 | நாள்-2 02/06 | நாள்-3 03/06 | நாள்-4 04/06 | நாள்-5 05/06 |
| 0.6 | 0.0 | 0.1 | 0.4 | 0.1 | மழை (மி.மீ) | 15 | 8 | 6 | 5 | 6 |
| 36 | 35 | 34 | 34 | 35 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 33 | 33 | 33 | 33 | 33 |
| 24 | 24 | 23 | 24 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 23 | 23 | 23 | 23 | 23 |
| 6 | 5 | 5 | 5 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 7 | 7 | 7 | 7 |
| 78 | 78 | 73 | 69 | 77 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 85 | 85 | 85 | 85 | 85 |
| 71 | 66 | 64 | 58 | 57 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 55 | 55 | 55 | 55 | 55 |
| 18 | 12 | 19 | 17 | 15 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 12 | 12 | 12 | 12 | 12 |
| 230 | 200 | 230 | 230 | 180 | காற்றுவீசும் திசை | 230 | 230 | 230 | 230 | 230 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (01.062022 முதல் 05.06.2022)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலான மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 85 சதவிகிதமாகவும்,

மாலைநேர காற்றின் ஈரப்பதம் 55 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 12 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | மேற்கு மண்டல மாவட்டங்களில் இடி மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.<br>மண்ணின் ஈரத்தை பொறுத்து இறவை பயிர்களுக்கு நீர் பாசனம் செய்வதுடன் பயிர்கழிவு மூடாக்கு இடுவதால் நீர் ஆவியாதல் தடுக்கப்படும்.<br>எதிர்பார்க்கப்படும் மழையினைச் சேமிக்கும் வகையில் சரிவுக்கு குறுக்காக மண்ணைப் புரட்டிப்போடும் கலப்பை கொண்டு கோடை உழவு செய்ய வேண்டும். |
| மக்காச்சோளம் | விதைப்பு | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி இறவையில் மக்காச்சோளத்தினை விதைக்கும் முன் இமிடாகுளோபிரிட் 70WS மருந்தினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்து பின் விதைக்கவும். |
| பருத்தி | பூக்கும் மற்றும் காய் பருவம் | கோடை கால இறவை பருத்தியில் பூ உதிர்வை தடுத்து காய் பிடித்தலை அதிகரிக்க என்.ஏ.ஏ என்ற வளர்ச்சி ஊக்கியை 40 பிபிஎம் (40 மில்லி கிராமை ஒரு லிட்டர் தண்ணீரில்) கலந்து தெளிக்கவும். |
| வாழை | | மழையுடன் காற்றின் வேகம் 12 கிமீ வரை அதிகரிக்க வாய்ப்புள்ளதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்க வேண்டும். |
| தென்னை | | மரங்களின் வேரில் மழை நீரை சேமிக்கும் வகையில் உள்நோக்கிய வட்டபாத்தியினை சீரமைக்கவும். |
| கால்நடைகள் | | இடி மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் கால்நடைகளை பாதுகாப்பாக கட்டி வைக்கவேண்டும்.<br>தீவனங்களை மழையில் நனையாமலும் ஈரத்தால் பாதிக்காமலும் பாதுகாக்க வேண்டும்.<br>மழையுடன் மணிக்கு 12 கி.மீ வேகத்தில் காற்று எதிர்பார்க்கப்படுவதால் கால்நடைக்குடில்களுக்கு போதிய பாதுகாப்பு செய்யவேண்டும்.<br>கடந்த வார மழையின் காரணமாக புதியதாக முளைத்த புல்லினை மேயவிடாமல் கால்நடைகளை பாதுகாக்கவும். |

**குறுஞ்செய்தி**

- இடி மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் கால்நடைகளை பாதுகாப்பாக கட்டி வைக்கவேண்டும். தீவனங்களை மழையில் நனையாமலும் ஈரத்தால் பாதிக்காமலும் பாதுகாக்க வேண்டும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**